பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 29 திங்கட்கிழமை (11-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 165

## யாழ் ஆயருக்கு இன்று வெள்ளி, பொன், பவள விழா

யாழ்ப்பாணம், மே 11

யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழா — முப்பெருவிழா — இன்று நடைபெறுவதையொட்டி யாழ். பேராலயப் பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஆண்டகை அவர்கள் ஆயர் பதவி ஏற்று 25 வருடங்களையும், துறவறம் பூண்டு ஐம்பது வருடங்களையும், 75 வயதையும் பூர்த்தி செய்வதை ஒட்டி இந்த முப்பெரு விழா நடைபெறுகிறது.

இன்று மாலை 3-30மணிக்கு மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகிறது.

அதைத் தொடர்ந்து 4 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்நிகழ்ச்சியில் 150 குருமார் கலந்துகொள்வது சிறப்பு அம்சமாக அமையும்.

திருப்பலியை அடுத்து நாதஸ்வர இசையுடன் திறந்த வெளி அரங்குக்கு ஆயர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார். குருமார்களும், பொது மக்களும் மலர் மாலை சூட்டுவர்.

அதைத் தொடர்ந்து யாழ்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## முப்பெரும் விழாவுக்கு ஆயர்கள் பலர் வருகை

யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். வந்துள்ள ஆயர் குழுவில் கொழும்பு மேற்றிராணியார் வண. நிக்கிலஸ் மார்க்ஸ், காலி ஆயர் வண. டொன் சில்வஸ்டர், குருநாகல் ஆயர் வண. நேமன் பீரிஸ், திருமலை—மட்டக்களப்பு ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் மட்டக்களப்பு, கொழும்பு மறைவட்ட குருமார்களும், அருட்சகோதரிகளும் வந்துள்ளனர்.

[உ-3-51]

## யாழ். குடாநாட்டு நிலைமை: ஆயர் குழு கேட்டறியும்

யாழ்ப்பாணம் வந்துள்ள ஆயர்கள் குழுவினர் குடாநாட்டு நிலைமை குறித்து கேட்டறிவர் என்று தெரிய வருகிறது.

இவர்கள் பிரஜைகள் குழு மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் யாழ். ஆயருடனும் யாழ். நிலைமை குறித்து உரையாடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர்களை ஆயர் குழு சந்திக்குமா என்பது குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை.

ஆயர் குழு நாளை மாலை கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-3]

## அக்கரைப்பற்று கண்ணியால் இன்ஸ்பெக்டரும் மரணம்

யாழ்ப்பாணம், மே 11

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் விசேட அதிரடி [கொமாண்டோ] படையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரும் பொலீஸ்காரர் ஒருவரும் உயிரிழந்தனர். மற்றும் 7 பேர் படுகாயமுற்றனர்.

அக்கரைப்பற்றுப் பகுதியில் தாண்டியடிக்கும் கஞ்சிகுடிச்ச ஆறுக்கும் இடைப்பட்ட ஓரிடத்திலேயே கண்ணி வெடிச் சம்பவம் இடம்பெற்றது.

விகாரமலை காவலரணுக்கு ஜீப் மற்றும் கவச வாகனம் ஆகியவற்றில் சென்ற கொமாண்டோக்கள் மீது, காவலரணுக்கு சுமார் 400 யார் தூரத்தில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கண்ணியில் சிக்கிய கவச வாகனம் சிதறிப் போனதாகவும் தெரிய வந்தது.

இந்தச் சம்பவத்தில் கொமாண்டோ படையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரும் மற்றொருவரும் உயிரிழந்தனர் என்பதை ஸ்ரீலங்காப் படைவட்டாரங்களும் ஒப்புக்கொண்டுள்ளன.

[ஒ-எ]

## ராஜீவ் கொலை பற்றிய வர்மா குழு அறிக்கையால் பல அதிகாரிகளுக்கு கல்தா?

புதுடில்லி, மே 11

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான நீதியரசர் வர்மா ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாவதைத் தொடர்ந்து பல அரசு உயர் அதிகாரிகளின் பதவிகள் பறிபோகலாம்.

இப்படி சமஷ்டி புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என ஏ. எவ். பி. செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரம் கழித்து ஆரம்பமான வர்மா விசாரணைக் கமிஷன் தனது விசாரணைகளைக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

# இராணுவ வழியில் தீர்வு காணமுடியாது

## கனடா மீண்டும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 11

**இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தை மூலமே நிரந்தரமான தீர்வை எட்ட முடியும். — இவ்வாறு கனடா அரசு மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது.**

கனேடிய அரசின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் தமது அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு கே. சி. ஆடியபாதம் கனடாவின் பிரதம மந்திரி பிறையன் மல்றோனிக்கு எழுதிய கடிதம் ஒன்றில், வல்வெட்டித்துறையில் இலங்கை விமானப்படை நடத்திய அட்டூழியங்கள் பற்றி விவரித்திருந்தார்.

அக்கடிதம் தொடர்பாக கனடிய அரசின் ஆசிய பசுபிக் தெற்கு உறவுகள் பிரிவு இயக்குநர் ஜே. ஜே. ஸ்கொட் திரு. ஆடியபாதத்திற்குப் பதில் அனுப்பியுள்ளார்.

அந்தப் பதிலிலேயே கனடா அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

சட்டரீதியான இன அபிலா

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஜி.சீ.ஈ.(சாதாரணம்) விசேட பரீட்சை: குடாநாட்டில் சுமாரான முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 11

கடந்த டிசம்பரில் நடைபெற்ற — 1990ஆம் ஆண்டுக்குரிய — ஜி. சீ. ஈ. சாதாரண விசேட பரீட்சை முடிவுகள் யாழ். மாவட்டத்தில் நேற்று வெளியாகின.

குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள் சுமாராகவே இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முற்கொண்டு கிடைத்த தகவல்களின்படி மாணவர்கள் எவருமே எட்டுப் பாடங்களில் அதி விசேட சித்தி (எட்டு ''டி'') பெறவில்லை. அதேவேளை ஏழு பாடங்களில் அதி விசேட சித்தி பெற்றுள்ளவர்களில் பலருக்கு எட்டாவது பாடத்துக்கான முடிவுகள் வந்து சேரவில்லை.

அழகியல் பாடங்கள் சிலவற்றின் செய்முறைப் பரீட்சைகள் நடைபெறாததால் அவற்றுக்கான முடிவுகள் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முற்கொண்டு கிடைத்த தகவல்களின்படி சில பாடசாலைகளின் மாணவர்கள் பெற்ற முன்னணிப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் 3 படையினர் பலி

கொழும்பு, மே 11

திருகோணமலைக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மற்றொரு மோதலிலும் குறைந்தது 3 படையினர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விவரங்கள் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

[ஒ-எ]

## தெரிவுக்குழுவின் தீர்வு விவகாரம் 19 ஆம் திகதி?

கொழும்பு, மே 11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழு இம்மாதம் 19 ஆம் திகதி தீர்வு குறித்து தெரிவுக் குழு அங்கத்தவர்களுக்கு அறிவிக்க உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை நேற்று வெளியிட்டது.

[உ-எ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 11

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வெடி விபத்துச் சம்பவம் ஒன்றில் 2 ஆம் லெப்டினன்ட் மாவி [நாகலிங்கம் பகீரதன் — மீசாலை] என்பவர் வீரமரணமடைந்துவிட்டார்.

(ஒ)

## புலிகளுக்குத் தடை விதிக்க அரசுக்குத் தயக்கம் இல்லை!

### அமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

சென்னை, மே 11

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிப்பதில் மத்திய அரசுக்கு எதுவித தயக்கமும் இல்லை.

மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் ப. சிதம்பரம் நேற்றுக் காலை திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான ஆதாரங்களைத் தொகுத்து, உரிய சட்டப் பிரகடனத்தை வெளியிட வேண்டுமாதலால், இந்த விடயத்தில் மத்திய அரசு மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. இன்னும் சில நாட்களில் முடிவு அறிவிக்கப்படும் — என்றார் அவர்.

சிவகங்கையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் —

''தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் ஒரு விசாரணைக் கமிஷனின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அத்தீவிரவாதிகளுடன் தொடர்புகள் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' — என்றார்.

[உ-எ-த]

## இந்திய அரசின் முடிவு விரைவில் வெளியாகுமாம்!

கொச்சி, மே 11

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை தடை செய்வது பற்றி மத்திய அமைச்சரவை தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது. விரைவில் முடிவு வெளியிடப்படும்.

மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் கேரள மாநிலம் — கொச்சியில் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தமிழகத்தில் நிதி உதவி அளித்து, உடந்தையாக இருந்து வரும் அமைப்புகளும் நசுக்கப்படும் என்றார் அவர்.

ஒரு வெளிநாட்டு அமைப்பாக உள்ள இயக்கத்தைத் தடை செய்வது சம்பந்தமாக சட்டரீதியான அரசியல் ரீதியான பல்வேறு அம்சங்களை மத்திய அரசு தற்போது பரிசீலனை செய்து வருகின்றது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளையும் அந்த இயக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்டப் போட்டி

நவாலி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும்
வடமாகாண ரீதியிலான
மாபெரும் விலக்கல் முறையிலான
உதை ந்தாட்ட சுற்றுப் போட்டி
விண்ணப்ப முடிவு திகதி: 20 — 05 — 1992
தொடர்பு:
வளர்மதி சனசமூக நிலையம்,
நவாலி. [சி-2296]



யாழ். ஆயர்
## மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின்
## பவள, பொன், வெள்ளி ★ விழா ★
இன்று (11—05—1992)




விமரிசையாக
நடைபெறுகின்ற
வேளையில்
அவர் மேலும் பல
வருடங்கள்
எம் முன் வாழ்ந்து,
வைர விழாவையும்
கொண்டாட வேண்டி
இறைவனை இறைஞ்சி
வாழ்த்துகின்றோம்.

### எஸ். எம். பெர்னாண்டோ,
580, ஆஸ்பத்திரி வீதி,
[இலங்கை வங்கி அருகாமை]
யாழ்ப்பாணம். [சி-1995]



## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### தருமலிங்கம் செல்லப்பா
[இளைப்பாறிய நெசவு ஆசிரியர்]

தோற்றம்: 12--06-1922 மறைவு: 23-04-1991

திதி: 11 05 1992

அன்பின் அருவியாய், அறிவின் ஒளிவிளக்காய்,
பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய்,
குன்றின் ஒளியாய், குடும்பத்தின் குலவிளக்காய்,
விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம்
இவ்வுலகை விட்டு மறைந்தாலும்
அவர்களின் நினைவு எம் நெஞ்சை விட்டகலா!
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செட்டிய குறிச்சி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. [20900]


## அடகு பிடிக்கும் வேலை ஆரம்பம்

வவுனியா, மே 11

நகை அடகு பிடிக்கும் வேலைகள் வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நகை அடகு பிடிக்கும் வேலைகள் வடக்கு-கிழக்கு கிளைகளில் நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த 29 ஆம் திகதி வரை அடகு நகை மீளப்பெற பணம் செலுத்தியோரின் நகைகள் வவுனியா வங்கியில் வைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஐரோப்பிய இந்து மாநாடு

பிராங்பேர்ட், மே 11

எதிர்வரும் ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜேர்மனி - பிராங்க் பேர்ட் நகரில் ஐந்தாவது ஐரோப்பிய இந்து மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கையில் இருந்து கலந்துகொள்ள விரும்புவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் கேட்டுள்ளார், (உ-எ)

## விண்ணப்ப முடிவு தினம்

கொழும்பு, மே 11

நாட்டில் உள்ள தமிழ், சிங்கள பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் தினம் ஜூன் 5 ஆம் திகதியாகும். பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறும். கல்விச் சேவை ஆணைக் குழு அங்கத்தவர் திரு. க. ஜெயக்குமார் இத்தகவலை வெளியிட்டார்.

அம்பாறை, திருமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா. முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் இந்தப் பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## மீண்டும் ஒஸி மக்கள் கட்சியில்

கொழும்பு, மே 11

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஒஸி அபயகுணசேகரா மற்றும் இரு உறுப்பினர்கள் ஆகியோரை கட்சியில் இருந்து வெளியேற்றுவது என்ற உத்தரவு வாபஸ் வாங்கப்பட்டு விட்டதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து, அம்மூவரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருப்பர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது [உ-ஏ]

## வர்த்தகர் கொலை

கொழும்பு, மே 11

கொழும்பில் பிரபல ஹோட்டல் வர்த்தகர் நம்பி செட்டியார் (வயது 55) கடந்த புதன் இரவு வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந் தெரியாத மூன்று நபர்களினால் குத்திக் கொல்லப்பட்டார்.

ஹம்டன் ஒழுங்கையில் உள்ள அவரது வீட்டுக்குள் பிஸ்டல், கத்திகளுடன் வந்த மூவரே இக் கொலையைச் செய்தனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் அவரது மகனும், மருமகனும் காயமடைந்துள்ளனர்.

தொழிற் பிணக்கே இக் கொலைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## சித்திரவதையை ஆட்சேபித்து
## ரூ. 2 லட்சம் நஷ்டஈடு கோரி தமிழர் உயர்நீதிமன்றில் மனு
### விசாரணைக்கு ஏற்கப்பட்டது

கைதாகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும்— பிரெஞ்சு மருத்துவத் தொண்டு நிறுவனமான எம். எஸ். எவ் வின் சாரதி —பஸ்தியாம்பிள்ளை அமிர்தகுமார் இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, கே. எம். பி. குலதுங்க, எஸ். பி. டபிள்யூ. வருகொடப்பிட்டிய ஆகியோர் மனுவை விசாரணைக்கு ஏற்க அனுமதி வழங்கினர்.

மனுவில் கம் — உதாவ சோதனை நிலைய பொறுப்பதிகாரி, தள்ளாடி இராணுவ முகாம் தளபதி, அந்த முகாமைச் சேர்ந்த லெப்ரினன்ட் வீரசூரிய, கோப்ரல் தலுவத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்ரினன்ட் ஜெனரல் ரணதுங்க, சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மனுதாரர் கடந்த நவம்பர் 22 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கம் — உதாவ சோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் தள்ளாடி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு இரவு 7 மணி முதல் அதிகாலை 3.30 மணி வரை லெப்டினன்ட் வீரசூரிய, கோப்ரல் தலுவத்த ஆகியோராலும் மற்றும் ஐந்து இராணுவத்தினராலும் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார். இதனால் அவரது வலது பெருவிரல் நகம் கிழிந்து போனது; எலும்பு வெளியே வந்தது; இது பெருவிரல் நிரந்தரமாக செயலிழந்தது; பெற்றோல் ஊற்றி தீவைத்து எரிக்கப் போவதாக மனுதாரரை இராணுவத்தினர் மிரட்டினர்.

பின்னர் ஏற்கனவே தயா

[5 ஆம் பக்கம் பார்க்க]


யா / மானிப்பாய்
### மெமோறியல் ஆங்கில பாடசாலை
### பழைய மாணவர் சங்கம்

1992 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்தப் பொதுக் கூட்டம் 24-05 1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் பழைய மாணவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

வருடச் சந்தாப் பணம் ரூ 10/- அல்லது ஆயுட் சந்தாப்பணம் ரூ 100/- பொதுக்கூட்டத்திற்கு முன் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

சு தர்மசீலன், தலைவர்.
இ. வசந்தசேனன், செயலாளர்.
[20939]



## BRIGHTன் வெளியீடுகள்

1. ஆண்டு 3 சுற்றாடற் கல்வி செயல் நூல் — 22 00
2. ஆண்டு 4 சுற்றாடற் கல்வி செயல் நூல் — 25-00
3. ஆண்டு 5 சுற்றாடற் கல்வி செயல் நூல் — 22-00
4. ஆண்டு 5 புலமைப்பரிசில் கடந்தகால வினா - விடை — 50 00
5. ஆண்டு 8 சமூகக்கல்வி — 45-00
6. G. C. E. O/L கணிதம் [88, 89, 90 வினா-விடை] — 50-00
7. G. C. E. O/L ஆங்கிலம் [88, 89, 90 வினா-விடை] — 50-00
8. G. C. E. O/L கட்டுரை மஞ்சரி — 40-00
9. G. C. E. O/L சித்திரக் கை நூல் — 50-00
10. G. C E. A/L பிரயோக கணிதம் [10 வருட வினா-விடை] — 150-00
11 G. C. E. A/L பொருளியல் [வினா-விடை] — 175-00
12. G. C. E. A/L குறியீட்டு அளவையியல் — 45-00
13. G. C. E. A/L முகைதீன் புராணம் — 50-00
14. G. C E. A/L அளவையியலும் - விஞ்ஞான முறையும் — 75-00
15. இந்து நாகரிகம் [A/L & G. A. Q. & B. A.] — 150-00
16. பொது அறிவு [100 வினா-விடை, 8 வருட நுண்ணறிவுப் பயிற்சி] — 90-00
17 S. L. A. S. வினாத்-தொகுப்பு — 90-00
18. ஆசிரியர் போட்டிப் பரீட்சை (வினா-விடை] — 95-00
19. கம்பியூட்டர் பேசிக் மொழி — 25-00

பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

[4845]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் புலனாய்வு பிரிவு மலையகத்தில் நடமாட்டம்

## இராணுவத் தரப்பு கூறுகிறது

கொழும்பு, மே 11

மலையகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட்டம் இருப்பதாகவும்—

அவர்கள் மலையகத்தில் உள்ள இராணுவ முகாம்கள் பற்றிய புகைப்படங்களை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும்—

மலையகப் பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இதனை இராணுவம் கருதுவதாகவும்—

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து மலையகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவ எடுக்கும் முயற்சிகளைக் கண்காணிப்பதற்காக இராணுவமும் தனது புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மலையகத்தில் விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்கள், நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாதிப்பையும் இராணுவத்தின் கவனத்தை வடக்கு-கிழக்கில் இருந்து திசை திருப்புவதையும் ஏற்படுத்தும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வர்த்தகர்கள், தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் தம்பதிகள் என்ற போர்வையில் மலையகத்தில் ஊடுருவல் செய்யும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் இயக்க ஏஜண்டுகளான ஒரு இளைஞனும், யுவதியும் பாதுகாப்பு முகாம்களின் முன்னால் நின்று புகைப்படம் பிடித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''யுவதியை இராணுவ முகாம் முன்னால் நிற்க வைத்து ஒருவர் புகைப்படம் பிடிப்பார். அந்த புகைப்படத்தில் பாதுகாப்பு முகாம் பற்றிய காட்சி இடம்பெறும் இதுவே தகவல்களைச் சேகரிக்க கடைப்பிடிக்கும் தந்திரமாகும்'' இப்படி அவ்வட்டாரங்கள் மேலும் விவரித்தன.

[உ-எ]


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L

அடுத்த புதிய பிரிவு:

**DAY CLASSES**

(காலை 8மணி முதல் மாலை 3மணி வரை)

ஆரம்பம்: 14 - 05 - 1992

★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.

★ அலகு ரீதியான வினா - விடை வகுப்புகள் இலவசமாக நடைபெறும்.

★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு மணிநேரம் நடைபெறும்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-2280]


## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 07 — 1890



மறைவு: 11 — 05 — 1969

### திருமதி மாணிக்கம் கந்தையா

செட்டியார் மடம். அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

[இவர் களுவாஞ்சிக்குடி அரசினர் வைத்தியசாலை ஓய்வு பெற்ற வைத்தியப் பொறுப்பதிகாரியும், களுவாஞ்சிக்குடி பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி ஸ்தாபகத் தலைவருமாகிய டாக்டர் கே. ஷண்முகம் அவர்களின் அன்னையுமாவார்.]

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று''
''தாயிற் சிறந்த கோவிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரமுமில்லை''

என்ற மூதாதையினரின் அமுத வாக்குகளுக்கு அமைய, இறைவன் ஒருவன் இருக்கின்றான். சத்தியமே தெய்வம் என்ற அருள் மொழிகளைப் போதித்து வழி நடத்திய கண்கண்ட அன்புத் தெய்வங்களாகிய அம்மை, அப்பன் மறைந்து இருபத்திமூன்று ஆண்டுகளாகி விட்டன.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என் முன்னும், பின்னும், பக்கத்திலும் நின்று வழிகாட்டியாக நடமாடிக் கொண்டு இருக்கும் பகவானை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஏக புதல்வன்:
டாக்டர் கே. ஷண்முகம்.

''பிரசாந்தி இல்லம்''
மானிப்பாய் வீதி.
ஆனைக்கோட்டை.

[1002]

## தோ. தொழிலாளர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, மே 11

அப்புத்தளை தங்கமலை தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளைக் கண்டித்து சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

மேற்படி சத்தியாக்கிரகத்தில் ஆயிரம்பேர் ஈடுபட்டுள்ளனர். தோட்ட பங்களாவை சுற்றியே இவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

[உ-3]

## காடுகளில் தங்கும் தமிழர்

மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி, ஆறுமுகத்தான் குடியிருப்பு. ஐயங்கேணி ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் ஊர்காவல் படையினரின் அச்சுறுத்தல்களால் இரவு நேரங்களில் காடுகளில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

[உ-3]

## இன்னும் திரும்பவில்லை

குருநகர், மே 11

நாவாந்துறை கடல் வழியாக அல்லைப்பிட்டிக்கு வெள்ளிக்கிழமை மாலை தொழிலுக்குச் சென்ற குருநகர் மீனவர் ஒருவர் மறுநாள் மாலை வரையில் திரும்பி வரவில்லை.

குருநகர் பவுண்சார்மேல் வீதியைச் சேர்ந்த அந்தோனி செபஸ்தியாம்பிள்ளை [சின்னராசா — வயது 44] என்ற மீனவரே இன்னும் திரும்பி வராதவர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு, மண்கும்பான் கரைகளில் இருந்து படையினர் சரமாரியாக பீரங்கி மற் [illegible]

(உ-51)

## வாகரையில் உயிரிழந்த படையினரில் ஒருவர் கப்டன்

வாகரையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த அரசபடையினரில் கப்டன் டி. என். விதானாவும் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் இலங்கை காலாட் படையின் 3ஆம் பிரிவில் கடமையாற்றி வந்தார்.

இச்சம்பவத்தில் அரச படையினர் எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலின் போது மேலும் நான்கு படையினர் காணாமற் போய்விட்டனர் என்றும் அவர்களைக் கண்டு பிடிக்க ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கதிர வெளியில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு விட்டு வாகரை முகாமுக்குத் திரும்பிய படையினர் மீதே விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள்—200க்கு அதிகமானோர்—திரண்டு தாக்குதல் நடத்தினார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

[உ-எ]

## வாழைச்சேனையில் வைத்து ரயிலில் பயணம் செய்த 6 தமிழர் கடத்தப்பட்டனர்

கடந்த திங்கள் இரவு கொழும்புக் கோட்டையில் இருந்து புறப்பட்ட மட்டக்களப்பு ரயிலில் பயணம் செய்த ஆறு தமிழர்கள் வாழைச்சேனை ரயில் நிலையத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பொல்லுகள் மற்றும் ஆயுதங்களுடன் வந்த ஒரு கோஷ்டியினரே மேற்படி ஆறு தமிழர்களையும் கடத்திச் சென்றனர் என்று கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.


# கீன் கல்வி நிலையம்,

திருநெல்வேலி.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. கருணாகரன் |
| தமிழ் | — | திரு. புலவர் சிவா |
| ஆங்கிலம் | — | திரு. எம். ஏ. ஹரி |
| சமூகக்கல்வி | — | திரு. மகேஸ் |
| வர்த்தகம் | — | திரு. வ. சி. கேசவன் |

ஆரம்பம்; 12 - 05 - 1992

(காலை 8-00 மணி)

**SPECIAL SPOKEN ENGLISH CLASSES**

**By. Mr. A. REGINALD**

ஆரம்பம்: 12 - 05 - 1992

(மாலை 4-30 மணி)

(C/2000)


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 03—03—1925



மறைவு: 11—05—1987

அமரர்

### மரியாம்பிள்ளை சிமியாம்பிள்ளை

[முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளர்]

அணையாத எம் குல விளக்கே!
அழியாத புகழுடன் இப்பாரினில் திகழ்ந்தீர்
பூப்போல் எமை நீர் கவர்ந்தீர்
கல்வியிலே சிறந்தோனாய் திகழ்ந்தீர்
நீர் மறைந்து ஐந்தாண்டுகள் சென்றாலும்
மாறாது நின் நினைவலைகள் எம்மை விட்டு.

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்,

அவரின் நினைவலைகளில்
சிக்குண்ட இதயங்கள்.

56, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

[4839]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

கணக்காளர்,லிகிதர் வேலை செய்வதற்கு ஆங்கிலம், தமிழ் நல்லறிவும், ஆங்கில, தமிழ் தட்டச்சு வேலையில் நல்ல அனுபவமும் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்; கு. வி. அச்சகம். 217 மின் சார நிலைய வீதி, யாழ்ப் பாணம். [4844]

### மணமக்கள் தேவை

ஆண் 33 வயது, செவ்வாய் குற்றமில்லை, மூல நட்சத் திரம். ஆண் 48 வயது. வியா பாரம். பெண் 23 வயது 7இல் செவ்வாய் B. Sc. விரிவுரை யாளர், பெண் குற்றமற்ற 26 வயது டாக்டர், மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட் டம், யாழ்ப்பாணம். [20912]

ஆண் செவ்வாய்க் குற்ற முள்ள 36 வயது பெரியவர்த் தகர், பெண் குற்றமற்ற 30 வயது B. Sc. விரிவுரையாளர், பெண் 29 வயது சிவில் எஞ்ஜி னியர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20913]

### மணமகள் தேவை

சவூதியில் டெக்னீசியனாக தொழில் புரிந்து யாழ். திரும்பவிருக்கும் இந்து 38 வயது, ஆயிலியம், செவ் வாய்க் குற்றமற்ற மகனுக்கு பெற்றோர் 33 வயதுக்கு உட்பட்ட பொருத்தமான துணையைத் தேடுகின்றனர். முதல் கடிதத்திலேயே முழு விவரங்களுடன் எழுதவும். இல. 404, C/o, உதயன். [20894]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து 44 வயது கணக்காளர் மணப் பெண்ணுக்குரிய மணமக னைப் பெற்றோர் தேடுகின் றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி கொய் யாத்தோட்டம், யாழ்ப்பா ணம். [20911]

யாழ்ப்பாண இந்து (கிரக பாவம் 0), 30 வயது அழகிய G. A. Q. ஆசிரியைக்கு பெற் றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம் அவிட்டம் 2. மங்கள ஏஜெ ன்சி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [20910]

30 வயதுடைய Non. R.C. தொண்டர் ஆசிரியைக்கு அதே சமயத்தில் அல்லது R. C. யில் மணமகன் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் பேசித் தீர்க்கலாம் காலை 9-00 தொடக்கம்4-00மணி வரைசந் திக்கலாம் புதிய மாங்கல்யா மல்ற்றி சேவிஸ், 361, பருத் தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [20940]

### சங்கீதம்

சங்கீதம் வினா – விடை தயாரிப்பு: ஸ்ரீமதி தாட்சா யணி சிவானந்தசர்மா 6முதல் 9வரை பயிலும் மாணவர் களுக்கும், சங்கீதசபை இரண் டாம் தரம் பயிலும் மாணவர் களுக்கும் பயன் தருவது நடு வுத்துருத்தி நிறுவனத்தின் வெளியீடு; கிடைக்குமிடம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [20931]

### மணப் பெண்கள் தேவை

குற்றமற்ற 28 வயது B.A. விரிவுரையாளருக்கும், 32 வயது சிமெந்துக் கூட்டுத்தா பன உத்தியோகத்தருக்கும். சைவ போசன செவ்வாய்குற்ற முள்ள பரணி நட்சத்திரம் என்ஜினியருக்கும் தேவை. மங் கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20909]

### திருமண சேவை

ABCDE ஸ்தாபனத் தில் செவ்வாய் குற்றம் உள்ள வர்களும், அல்லாதவர்களும் இலக்கினத்தில் ராகு, கேது உள்ளவர்கள், ஆசிரியர்கள, டாக்டர்கள், பொறியிய லாளர்கள் வேறு சில தொழில் புரிபவர்கள் உள்ள னர். உங்கள் தேவை எது வாகிலும், தொடர்பு கொள் ளவும். இல. 20, கண்டி வீதி. சுண்டிக்குளி. [20905]

### வர்த்தக வினா - விடை

G. C. E (O/L), ஆண்டு 9, 10 வகுப்புகளுக்குரிய வர்த் தக வினா-விடைத் தொகுப்பு- மீள்பதிப்பு செய்யப்பட்டு யாழ் நகரில் முன்னணி புத் தகசாலைகளிலும், கொக்கு வில் இந்துக்கல்லூரி அருகா மையுள்ள புத்தகசாலை யிலும். மானிப்பாய் நாயக பாலன் புத்தகசாலையிலும் விற்பனையாகின்றன. ஆக்கம் த. தர்மராஜா. [20928]

## திறப்பு விழா

அன்னை திரேசா சனசமூக நிலையத் திறப்பு விழா அண் மையில் அச்சுவேலியில் நடை பெற்றது. திரு இராசநாய கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வலி – கிழக்கு சனசமூக நிலையங்களின் சமா ஜத் தலைவர் திரு. வி. வி. இராசரத்தினம் சனசமூக நிலையத்தைத் திறந்து வைத் தார். [த]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் மா. நடராசா

தோற்றம்: 01 – 07 – 1935 மறைவு: 11 – 04 – 1992

இணைபிரியாத துணைவிதனை இழந்ததுயர்
–தாங்காமல்
துணையில்லாப் புத்திரர்க்குத் துணைதேடும்
எண்ணங்கள்–மனதினிலே
நிறைந்த வண்ணம் துணைவி சென்ற பாதைதன்னில்
மறைந்தாயோ ராசா! மறப்போமா இறக்கும்வரை

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கும்:
பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர். மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள்.

'நசரேத்'
உடுவில்,
சுன்னாகம். [20850]

# நன்றி நவிலல்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி 85ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திருமதி
**கோபாலசுந்தரம் சிவலோகநாயகி**

தோற்றம்: 23 – 11 – 1942
மறைவு: 09 – 04 – 1992



அமரர் திரு.
**ஐ. கோபாலசுந்தரம்**
(கோபால்)
[எக்ஸ்போ பேணிச்சர் (P.V.T.) Ltd. ஸ்தாபன முகாமையாளரும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும்]

தோற்றம்: 19 – 02 – 1932
மறைவு: 14 – 02 – 1992

குடும்பத்தின் உறவுகள் மலர்ந்ததம்மா மனைவிளக்கும் சுடர்விட்டு எரிந்ததம்மா,
காலத்தின் கோலத்தில் உங்களுக்கோ பிள்ளைகளாய் மலர்ந்திட்டோம் அம்மா,
பொன் விழா வயதினிலே எமக்கு மண் விழா தந்திட்டாயோ அம்மா,
கானக்குயிலாய் வளர வேண்டிய நாம் இன்று பாலைவனச் சோலையில் –
தவழ்கின்றோம் அம்மா,
அப்பாவை இழந்த மதலைகள் நாம், அம்மாவை நழுவிய குஞ்சுகளும் ஆனோம்,
பெற்றோரை இழந்திட்ட தாகமோ எம்மை வரட்சியில் தாலாட்டுதே,
காவப் பூங்கா மலருதம்மா உங்கள் கனவுப் பூங்கா கருகுதம்மா,
பரந்தாமன் பதம் நாடி பறந்தனையோ, எமக்கும் அந்தவழி கொடுக்கமாட்டாயோ?

ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொண்ட அன்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

பிரிவால் துயருறும்:
– பிள்ளைகள்.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு. [20929]

# ஈராண்டு நினைவஞ்சலி



## அமரர் A. R. சண்முகலிங்கம்

(கெங்கநாதன்)
(முன்னாள் யாழ். புகையிரத நிலைய அதிபர்)
[Formerly Jaffna, Railway Station master]

தோற்றம்: 20–03–1937 மறைவு: 11–05–1990

உங்கள் பிரிவால் தாங்க முடியாமல் துயருறும்:
அன்பு மனைவி
தர்மரஞ்சிதம் - சண்முகலிங்கம்,
உறவினர்கள்.

56,பலாலி றோட்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். [20923]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த ஆளுமையின் உருவமாகவும் உள்ளடக்கமாகவும் விளங்கும் ஆயர்

## இன்று முப்பெருவிழாக் காண்கிறார்

செல்வி. நா. விமலாம்பிகை
(திருமறைக் கலாமன்றம்)

ஈழத்தமிழ் மண்ணில் ஓர் இளஞாயிறு எனத் தோன்றி, மறைக்கும், தமிழுக்கும் தம் ஒளியால் வளம் சேர்த்தவர் இன்று சிறப்புற முப்பெரு விழாக்காணும் யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை.

அவர் இன்னலுற்று இடருழந்த ஈழமக்களின் விடுதலைக் காய் குரல் கொடுத்தவர்: தமிழின் அம்மானை இசையிலும், அரங்குப் பாடல்களின் சுவையிலும் கிறிஸ்துவைக் காணும் அற்புத பனிதர்.

அவர் இவ்வாண்டில் தம் எழுபத்தைந்தாவது அகவை நிறைவையும், துறவற வாழ்வின் பொன் விழாவையும் யாழ். ஆயராகிப் பணி புரிந்து வெள்ளி விழாவையும் காணுகிறார்.

பழம் பெருமை வாய்ந்த ஊர்காவற்றுறையிலே புரட்சி பூதிக 1917 ஆம் ஆண்டில், சித்திரைத் திங்கள் 9 ஆம் நாள் மரியாம்பிள்ளை வஸ்தியாம் பிள்ளை — அந்தோனியாப் பிள்ளை இன்னேசியாப் பிள்ளை ஆகியோரின் தவப் பேறாக அவர்தம் பதினொரு குழந்தைகளில் கடைக் கொழுந்தாய் ஆயர் அவர்கள் பிறந்தார்.

கரம்பொன் புனித செபஸ்தியார் கலவன் பாடசாலையில் 1921 ஆம் ஆண்டு முதல் 1924 ஆம் ஆண்டுவரை தமது நான்காம் வகுப்புவரை கற்றுத்தேறிய தியோகுப்பிள்ளை அவர்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆங்கிலப் பாடசாலையில் 1928 ஆம் ஆண்டுவரை கற்றார்.

நன் மாணாக்கனாகவும், விவேகியாகவும் திகழ்ந்த இளைஞன் தியோகுப்பிள்ளையின் மனம் குருத்துவ வாழ்வில் நாட்டமடைந்திருந்தது. எனவே 1929 ஆம் ஆண்டில் புனித மாட்டீன் குருமடத்தில் சேர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு தமது உயர்தரக் கல்வியை முடித்துக் கொண்டு 1935 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் ரோம் சென்றார்.

### கல்விமான்

22 10-1941 இல் கருதினல் ஃபூமசோனி பியொண்டி என்பவரால் திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர் அவர்கள் இரண்டாம் உலக மகா யுத்தம் காரணமாக ரோமாபுரியில் இருந்து 1945 ஆம் ஆண்டு தைத்திங்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

மெய்யியலில் சிறப்புப் பட்டம், இறையியலில் கலாநிதிப் பட்டம், திருச்சபைச் சட்டத்தில் இளங்கலைப் பட்டம் லண்டன் பி. ஏ., கல்வியில் டிப்ளோமா [இலங்கை] முதலிய பட்டங்களைப் பெறுற்ப் பட்டங்களுக்கே சிறப்புத் தேடிக் கொடுக்கும் வகையில் பெரும் கல்விமானாகத் திகழ்ந்தார்.

யாழ். பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்த பின் கல்விப்பணியில் இணைந்து 1946 1951 வரை அனுராதபுரம் புனித வளனார் கல்லூரியிலும், 1951 – 1953 வரை கரவெட்டி திருஇருதய ஆண்டவர் கல்லூரியிலும், 1954 – 1956 வரை இளவாலை புனித என்றியரசர் கல்லூரியிலும் முதல்வராகப் பணிபுரிந்தார். 1956 – 1963 வரை கொழும்புத்துறை புனித வளனார் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் அதிபராகப் பணியாற்றினார்.

### 1967 இல் ஆயரானார்

1967 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் திகதி திருகோணமலை – மட்டுநகர் ஆயர் இக்னேசியஸ் கிளெனிக்குத் துணை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு, 1972 மார்கழித் திங்கள் 18 ஆம் நாள் யாழ். ஆயராகத் தெரிவு செய்யப்பட்டு. 1973 ஆம் ஆண்டு தைத்திங்களில் தம் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

சிறந்த ஆளுமையின் உருவமாகவும் உள்ளடக்கமாகவும் விளங்கும் ஆயர் அவர்கள் ஈழத்தமிழ் மக்களின் போற்றுதலுக்குரிய பெரும் பொக்கிசமாக விளங்குகிறார். எம் உள்ளங்களிலெல்லாம் நிறைந்திடும் ஆயர் அவர்கள் நிறைவான இறையாசியுடன் நீண்ட காலம் வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக. ★

## இந்திய அதிகாரி சுட்டுக்கொலை

புதுடில்லி, மே 11

இந்திய மத்திய அரசின் விளைபொருள், செலவு மற்றும் விலைவாசிக் கமிஷனின் தலைவரான டாக்டர் டி. எஸ். தியாகி தெற்கு புதுடில்லியில் வைத்து தீவிரவாதிகளால் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஸ்கூட்டரில் வந்த தீவிரவாதிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது

திரு. தியாகியின் புதல்வியின் திருமணம் நேற்று [ஞாயிறு] நடைபெறுவதாக இருந்தது. [உ-எ]

## நாளை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு உஷத் காலப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும். [த]

## சேதம்

கொழும்பு, மே 11

கிழக்கு மாகாணம் – ஆலையடிவேம்பு என்னும் இடத்தில் ட்ரான்ஸ்போமர் ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது என கூட்டுப் படைகள் தலைமையலுவலகம் தெரிவித்தது.

## வர்மா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த வாரம் முடித்துக் கொண்டது.

''ராஜீவ் கொலை தொடர்பாக பல படங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. 170 வாக்கு மூலங்கள் ஆராயப்பட்டன. பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட படங்களில் ஒன்று ராஜீவ் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியவர் (bomber) இந்திரா காங்கிரஸ் தலைவர் ஒருவரின் காரில் இருந்து இறங்கி வருவதைக் காட்டுவதாக இருந்தது.'' — இப்படி நீதியரசர் வர்மா தனது விசாரணையை முடித்துக் கொண்டபோது தெரிவித்தார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய பெண் எவ்வாறு ராஜீவ் காந்தி அருகே செல்ல முடிந்தது என்பதைக் கண்டறிவதற்கே புதுடில்லி அரசு நீதியரசர் வர்மா தலைமையிலான விசாரணைக் கமிஷனை நியமித்துள்ளது

எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி கமிஷனின் அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

வர்மா கமிஷன் அறிக்கையின் சிபாரிசுகளைத் தொடர்ந்து பாதுகாப்பு மற்றும் உளவுப்பிரிவுகளில் களையெடுப்பு இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## ஜி. சி. ஈ. (சாதாரணம்)...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபேறுகளின் விவரங்கள் வருமாறு :-

**யாழ். இந்து**
14 பேர் — 7டி, 21 பேர் — 6டி, 19 பேர் — 5டி, 13 பேர் — 4டி.

**சுண்டுக்குளி மகளிர்**
6 பேர் — 7டி, 5 பேர் — 6டி, 5 பேர் — 5டி.

**இந்து மகளிர்**
4 பேர் — 7டி 8 பேர் — 6டி, 20 பேர் — 5டி, 17 பேர் — 4டி.

**சென். ஜோன்ஸ்**
3 பேர் — 7டி, 4 பேர் — 6டி, 4 பேர் — 5டி, 5 பேர் — 4டி.

**வேம்படி மகளிர்**
ஒருவர் — 7டி, 12 பேர் — 6டி, 12 பேர் — 5டி, 21 பேர் — 4டி.

**மத்திய கல்லூரி**
ஒருவர் — 6டி, 6 பேர் — 5டி, 6 பேர் — 4டி.

**கொக்குவில் இந்து**
ஒருவர் — 7டி, 6 பேர் — 6டி, 8 பேர் — 5டி, 8 பேர் — 4டி.

**சென். பற்றிக்ஸ்**
2 பேர் — 6டி, 2 பேர் — 5டி.

**திருக்குடும்ப கன்னியர் (ஆங்கிலம்)**
2 பேர் — 6டி, 3 பேர் — 5டி.

**கனகரத்தினம் ம. ம. வி.**
3 பேர் — 4டி.

**ஹாட்லி**
6 பேர் — 7டி 10 பேர் — 6டி, 11 பேர் — 5டி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்**
ஒருவர் — 7டி, 6 பேர் — 6டி, 6 பேர் — 5டி.

**நெல்லியடி ம. வி.**
ஒருவர் — 7டி, ஒருவர் — 6டி, 6 பேர் — 5டி, ஒருவர் — 4டி.

**கரவெட்டி விக்கினேஸ்வரா**
ஒருவர் — 6டி, ஒருவர் — 5டி, 3 பேர் — 4டி.

**மருதங்கேணி இ. த. க. பாடசாலை**
ஒருவர் — 5டி.

**தேவரையாளி இந்து**
ஒருவர் — 6டி.

**பருத்தித்துறை வேலாயுதம் ம. வி.**
ஒருவர் 5டி.

**கரவெட்டி றோ. க. த. க.**
ஒருவர் — 4டி.

**கரவெட்டி ஞானாசிரியர்**
ஒருவர் — 5டி.

**புற்றளை ம. வி.**
ஒருவர் — 6டி.

**கரணவாய் ம. வி.**
ஒருவர் — 4டி.

[உ-3-5-118]

## யாழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு. எஸ். ஏ. மைக்கல் சாமி (அ.ம.தி) தலைமையில் கூட்டம் நடைபெறும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத் தலைவர் வண. நிக்லஸ் மார்க்ஸ் ஆண்டகை, மன்னார் மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு ஏ. சேவியர்குருஸ், யாழ். மாவட்ட துறவிகள் சார்பில் அருட் செல்வி மேரியுடெக்ஸி, தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் மேதகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

விழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படும். பாமாலை வாசித்து வழங்கப் படும். (உ-3-51)

## தொ. ஆசிரியர் தூதுக்குழு கொழும்புக்கு!

தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து கல்விச் சேவைகள் ஆணைக்குழு தலைவருடன் பேச்சு நடத்த தூதுக்குழு ஒன்று இன்று கொழும்பு செல்கிறது.

தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் இத் தூதுக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். [உ-3]

## சிறப்புற நடந்தேறிய சிவத்தம்பியின் மணிவிழா

யாழ்ப்பாணம், மே 11

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மணிவிழா நேற்று மாலை மிகவும் சிறப்புற நிகழ்ந்தது. இவ்விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

கல்விமான்கள், பேராசிரியர்கள், உயர் அதிகாரிகள், இலக்கியகர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் என்று பல துறைகளைச் சார்ந்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்கு பற்றினர். நல்லை ஆதீன மண்டபம் நிரம்பி வழிந்தது.

பேராசிரியரும் பாரியாரும் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இருந்து ஆதீன மண்டபம் வரை மங்கள வாத்தியம் சகிதம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிரபல நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியுடன் ஆரம்பமான விழாவுக்கு பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் தலைமை வகித்தார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா தொடக்கவுரை நிகழ்த்தி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் இடம்பெற்றன.

பேராசிரியர் தம்பதியினருக்கு பிரமுகர்கள், கலைஞர்கள், அபிமானிகள், நண்பர்கள் ஆகியோர் மாலை அணிவித்தும், பதக்கங்கள் சூட்டியும் தமது அன்பைத் தெரிவித்தனர். [அ-111]

## இராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஷைகள் குறித்து உரிய கவனத்தைச் செலுத்துவதற்கு—

மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்க—

நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தைக் காண—

சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என கனடா தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது என்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

கனடா வெளியுறவு அமைச்சர் பார்பரா மக்டோகளின் பணிப்பின் பேரில் இப்பதில் கடிதம் வரையப்பட்டதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## இந்திய அரசின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கத்துக்கு விசுவாசமாக உள்ள அமைப்புகளின் நடவடிக்கைகளையும் ஒடுக்காவிட்டால் தமிழ்நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையும் அமைதியும் நிம்மதியும் பாதிக்கப்படக் கூடும் என்ற முடிவுக்கு மத்திய அரசு வந்துள்ளதாக இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [உ-எ]

## 60 மி.மீ. மோட்டர் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், மே 11

மட்டக்களப்பு, கதிரவெளிப் பகுதியில் கடந்த வியாழக் கிழமை சண்டை இடம்பெற்ற இடத்தில் மற்றொரு 60 மி. மீ. ஷெல் மோட்டர் கைப் பற்றப்பட்டது.

நேற்று முன்தினம் அப்பகுதியில் விடுதலைப் புலிகள் தடைகளை அகற்றிக் கொண்டிருந்த சமயம் இந்த மோட்டரைக் கைப்பற்றினர்.

ஏற்கனவே 81 மி. மீ. ஷெல் மோட்டர் ஒன்றும் மற்றும் பல ஆயுதங்களும் அங்கு கைப்பற்றப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தில் 10 படையினர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ஓ]

## ஆட்லறி தாக்கு!

யாழ்ப்பாணம், மே 11

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 2 மணி முதல் காலை 7 மணி வரை வளலாய், தொண்டமானாறு கரையோரப் பகுதி. கெருடாவில் ஆகியவற்றை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [உ-15]

## ரூ. 2 லட்சம்...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரிக்கப்பட்டிருந்த வாக்குமூலம் ஒன்றில் பலாத்காரமாக மனுதாரரிடம் கையெழுத்தை இராணுவத்தினர் பெற்றுக் கொண்டனர். எம். எஸ். எவ். மற்றும் செஞ்சிலுவை அதிகாரிகள் தலையிட்டதை அடுத்து மனுதாரர் முகாமில் உள்ள வேறு கூண்டுக்கு மாற்றப்பட்டார்.

இப்போது மகஸின் சிறைச் சாலையில் அடுத்துவைக்கப் பட்டுள்ளார். — இப்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரை உடனடியாக மருத்துவபரிசோதனை செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கும்படி சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்ட நீதியரசர்கள், மேல் விசாரணையை ஜூன் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் ஜோதி யாத்திரை

புதுடில்லி, மே 11

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் முதலாவது நினைவு தினத்தை ஒட்டி நடத்தப்படும் ராஜீவ் சந்தேஷ் யாத்திரை நேற்றுக் காலை புதுடில்லியில் உள்ள ராஜீவ் சமாதியில் இருந்து ஆரம்பமானது.

இந்திரா காங்கிரஸ் தலைவரும் பிரதமருமான திரு பீ. வி. நரசிம்மராவ் ராஜீவ் ஜோதியை ஏற்றி, இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவுத் தலைவர் ரமேஷ் செனிதாலாவிடம் கையளித்து யாத்திரையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த 2 ஆயிரத்து 800 கிலோ மீற்றர் யாத்திரை ஹரியானா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஊடாக வந்து இம் மாதம் 12ஆம் திகதி தமிழ்நாடு - ஸ்ரீபெரும்புதூரைச் சென்றடையும். [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபுராதனி சந்தனராசா

இல. 570, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சிவபுராதனி சந்தனராசா 9-5-1992 அன்று காலமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

[20950] ச. சிறீஸ்கந்தராஜா [மகன்]

## யசோதரலிங்கம் பாலகுமார்

[முகாமையாளர் கணக்காளர், த பினான்ஸ் லிமிட்டெட்]

திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி யசோதரலிங்கம் தம்பதியினரின் மகன் யசோதரலிங்கம் பாலகுமார் 8-5-1992 வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் மாரடைப்பால் லண்டனில் காலமானார்.

அன்னார் திரு. தகராஜ் [முகாமையாளர், வீரகேசரி, கொழும்பு], திரு. ஸ்ரீபத்மநாதன் [பொறியியலாளர், லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை], திரு. ஜெயந்திக்குமார் [இரசாயினி, சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை], திருமதி பாக்கியகுமாரி [லண்டன்], செல்வகுமார் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி விமலாதேவி தகராஜ், திருமதி கலாவதி ஸ்ரீபத்மநாதன், திருமதி பவானி ஜெயந்திககுமார், திரு. விஜயகுமார் [டாக்டர், லண்டன்] ஆகியோரின் மைத்துனரும், பிரசாந்தி, கார்த்திகேயன், நிரோஜன், தசிந்தன், நிமலன், கஜனி ஆகியோரின் அருமை சிறிய தகப்பனாரும், அபிமன்யுவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-5-1992] திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். அத்தருணம் திருநெல்வேலியிலுள்ள பிரஸ்தாப "தாயக" இல்லத்திலும் அனுதாப நிகழ்வுகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தகவல்:

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

திரு ஜெயந்திகுமார்
[ஆசிரியர்]
(20942)

## திரு. து. ஸ்ரீபத்மநாதன்

[முன்னாள் முகாமையாளர், அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம்]

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 69, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான து ஸ்ரீபத்மநாதன் காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி ந துரைரத்தினத்தின் அன்பு மகனும், அருந்ததி, குமுதினி, விஜயராகவன் [ஜேர்மனி], விக்னேஸ்வரன் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபத்மாநந்தா [காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்], ஸ்ரீபாஸ்கரன் [நியூற்ரோன் எலக்றிக்கல்ஸ் பங்காளர்] ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரம்மேந்திரா, பவித்ரா, வாகீசன் [புனித சென். ஜோன்ஸ் பொஸ்கோ] ஆகியோரின் அன்புத் தாத்தாவும், திரு. திருமதி க. சிவஞானம் அவர்களின் அன்பு மருமகனும், செல்வராணி சோமசுந்தரம், ஞானம் செல்வரட்ணம், ராபிநாகேந்திரா, அருளானந்தம், மகேந்திரன், பத்மாவதி சந்திரபால், வசந்தா குமரேசன், விமலா சிவரட்ணம், பவானி ஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்பு சகோதரனும் புஸ்பவதி பரமேஸ்வரி, லீலாவதி, புனிதவதி [யாழ். பல்கலைக்கழகம்], கனகசபாபதி ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், சின்னையா, கமலா, சூர்யா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [11-5-1992] மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகன கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்று கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

இல 69, வைமன் வீதி,
நல்லூர்.
(20948)

திருமதி ப. பத்மநாதன்
[மனைவி]

# இன்று

யாழ்ப்பாணம், மே 11

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று சிவானந்தா அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதும் இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் நடைபெற்றுவரும் லட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு திரு. தி. நந்தகுமார் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற பொருளில் உரைநிகழ்த்துவார். [உ]

★ ★ ★

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து நாவற்குழி ஐயனார் முகாமில் வசிக்கும் மக்களுக்காக அங்கு புதிய பாடசாலை ஒன்று இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படுகிறது.

வேலணை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட தம்பாட்டி அரசினர் பாடசாலையே திறந்து வைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம் பரிதி, தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். [உ]

## உற்சவம்

தென்மராட்சி, மே 11

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் உண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று நடைபெறும். [உ-117]

## இன்று முதல் மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், மே 11

சில காலம் தடைப்பட்டிருந்த யாழ். பலாலி பஸ் சேவை [764 ஆம் இலக்கப் பாதையில்] இன்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குப் புன்னாலைக்கட்டுவன் வரை நடைபெறும் என வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது. [உ]


ஒரு புதிய சாதனை!

இம்முறையும்

O/L 90 91

ஆண்டுப் பரீட்சைகளில் எமது மாணவர்கள் அள்ளி எடுத்த பெறுபேறுகள் மீண்டும் இதனை நிரூபிக்கின்றன.

வழமைபோல் எமது தனித்துவமான ஆசிரியர் குழுவுடன்

O/L 92

மாகாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன் இலவச கருத்தரங்குகளும்

ஆரம்பம் :

17-5-92

தொடர்பு :

BOND

Institutes

யாழ்ப்பாணம்.

[20949]


# ஆயுதங்களுடன் பிடிபட்ட சுவிஸ் பிரஜை காவலில்!

ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் நாட்டுக்குள் கடத்தி வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான சுவிஸ் நாட்டுப் பிரஜை, அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட மேற்படி ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் நாட்டுக்குள் கடத்தி வந்தார் என்ற உண்மை தற்போது வெளிவந்துள்ளது என்று பொலீஸார் கூறினர்.

சந்தேக நபரின் இக்கடத்தல் நடவடிக்கைகள் குறித்து தமக்கு ஒன்றுமே தெரியாது என்று இலங்கையரான அவரின் மனைவி தெரிவித்திருக்கிறார்.

சந்தேக நபரின் மனைவியின் தந்தை ஒரு சிங்களவர் என்றும் தாயார் ஒரு தமிழர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தந்தையார் இறந்துவிட்டார் என்றும் தாயார் சுவிஸில் இன்னும் வசித்து வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து விசேட நடவடிக்கைகள் பணியகத்தைச் சேர்ந்த பொலிஸார் சந்தேக நபரின் ஜா-எல வீட்டைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியபோது, பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று கூறப்படுகிறது.

தம்மால் பொழுது போக்குக்காக இவ்வாயுதங்களும், வெடி மருந்துகளும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன என்று அந்த சுவிஸ் பிரஜை தற்போது பொலீஸாருக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பதினெட்டு ரக துப்பாக்கிகளும் மற்றும் பல ரக ரிவோல்வர்களும் இருந்தன, கைப்பற்றப்பட்ட வாக்கிடோக்கி சாதனங்கள் சக்தி மிகுந்தவை என்றும் ஆயுதங்களில சில மிக நவீனமயமானவை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைப் பாதுகாப்புப் படையினரிடம் தற்சமயம் இல்லாத நவீன ரக ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டவற்றில் இருந்தனவாம். [பி-எ]

# திடீர் தேர்தலை முன்னிட்டு மாணவருக்கு இலவச சீருடை

## மறுக்கிறார் அமைச்சர் டிரோன்

கொழும்பு, மே 11

திடீர் தேர்தல் ஒன்றை நடத்துவதைக் கருத்தில் கொண்டுதான் அரசாங்கம் மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்க உள்ளது என்று எதிர்க் கட்சினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலவச சீருடைகள் அடுத்த ஆண்டில் இருந்து மாணவர்களுக்கு வழங்கப்படுவதை தேர்தல் சுலோகமாக அரசு பாவிக்க உள்ளது என்றும் எதிரணியினர் கூறுகின்றனர்.

ஆனால் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதற்கும், திடீர்த் பொதுத் தேர்தலுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று ராஜாங்க அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் பேசும்போது மறுத்தார்.

திடீர்தேர்தல் நடத்தப்படமாட்டாது. உரிய காலத்தில் தான் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் சொன்னார். (உ-எ-த)

# மட்டு. அகதி முகாம்களுக்கு நோர்வே குழு விஜயம்

மட்டக்களப்பு, மே 11

நால்வர் அடங்கிய— நோர்வே மனித உரிமைகள் குழுவினர் — மட்டக்களப்பில் உள்ள அகதி முகாம்களுக்கு கடந்த புதன்கிழமை விஜயம் செய்தனர்.

திருமலை — மட்டக்களப்பு ஆயர் வண. பிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் பொலீஸ், இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் குழுவினர் பேச்சு நடத்தினர்.

"முஸ்லிம் ஊர்காவல்படையினரிடமிருந்து ஆயுதங்களைக் களைவதே தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் இறுக்கமான ஐக்கியத்தை ஏற்படுத்த வழி" என்று மட்டக்களப்பு சமாதானக் குழுவினர், நோர்வே குழுவினரிடம் தெரிவித்தனர்.

நோர்வே குழுவில் எக்கோபி சில்டி, பெரி கார்ட்டி, அல்போன்மிஸ், தெறிபெயின் பேர்ட் ஆகியோர் அங்கம் வகித்தனர்,

அவர்கள் மட்டக்களப்பில் மனித உரிமைகள் குழுவின் பணியகம் ஒன்றை அமைப்பது குறித்தும் தம்மை மட்டக்களப்பில் சந்தித்த உயர் அதிகாரிகள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோரோடு கலந்தாலோசனை நடத்தினர். [உ-எ-3]

# பிலிப்பீன்ஸில் இன்று தேர்தல்

மணிலா, மே 11

பிலிப்பீன்ஸில் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து உள்ளூராட்சி உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 11 ஆயிரத்து 884 பதவிகளுக்கு இன்று தேர்தல் நடைபெறுகின்றது.

சுமார் 3 கோடியே 20 லட்சம் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் முக்கிய போட்டி திரு. பிடல் ராமோஸுக்கும் திரு. குவாங்கோவிற்கும் இடையே நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சரான பிடல் ராமோஸ் தற்சமயம் ஜனாதிபதியாக இருக்கும் கொரஸோன் அக்கினோவின் ஆதரவு பெற்றவர். குவாங்கோ முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் நெருங்கிய நண்பர்.

மார்க்கோஸின் மனைவியான இமெல்டா மார்க்கோஸும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ-10]

## வவுனியாவில் ஐ. தே. க வின் அலுவலகம்

ஐ. தே. கவின் வவுனியா மாவட்டக் கிளை அலுவலகம் நாளை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கட்சிச் செயலாளரும், அமைச்சருமான சிறிசேன கூரே அலுவலகத்தைத் திறந்துவைப்பார். (உ-3)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org